## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – 2026

# வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் கைபேசி ஒப்படைக்கும் வசதி!

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, மார்ச் 25-

வாக்காளர்களின் வசதியை உறுதி செய்யவும், மேம்பட்ட வாக்குப்பதிவு அனுபவத்தை வழங்கவும் இந்திய தேர்தல் ஆணையம் பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

வாக்காளர் தகவல் சீட்டை (*Voter Information Slip*) மேலும் எளிதாக்கும் வகையில், அதில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பாகம் எண் ஆகியவை தெளிவாகத் தெரியும் வண்ணம் தேர்தல் ஆணையம்மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடியைக் கண்டறிவதும், இதர விவரங்களைத் தெரிந்து கொள்வதும் எளிதாகும்.

வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களின் வசதிக்காக, வாக்குச்சாவடிகளில் கைபேசிகளை (Mobile Phones) ஒப்படைக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடியின் நுழைவாயில் அருகே மிகவும் எளிமையான 'புறா கூண்டு போன்ற ' (Pigeon hole) பெட்டி அல்லது சணல் பைகள் அமைக்கப்படும்; அங்கு வாக்காளர்கள் தங்களது கைபேசிகளை பாதுகாப்பாக வைத்துச் செல்லலாம்.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற 'ECINET' என்ற ஒருங்கிணைந்த ஒற்றை இணையதளத்தைத் செயல்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளது. இதில் ஆணையத்தின் 40க்கும் மேற்பட்ட செயலிகள் மற்றும் இணையதளங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாக்காளர்கள் பின்வரும் சேவைகளைப் பெறலாம்,

வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல், வாக்காளர் அடையாள அட்டையில் (EPIC) திருத்தங்கள் மேற்கொள்வது, வாக்குப்பதிவு சதவீத விவரங்களைப் பார்த்தல், வாக்குச்சாவடி விவரங்களை அறிதல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான உதவிகளைப் பெறுதல், தேர்தல் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவைகள் ஆகும். ECINET செயலியை கூகுள் பிளே ஸ்டோர் (Google Play Store) அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோர் (Apple App Store) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பணம், மதுபானம், போதைப்பொருள் மற்றும் இதர தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கண்காணித்துத் தடுக்க மாநிலம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் அமலாக்கக் குழுக்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றன. 23 மார்ச் 2026 வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

ரொக்கம் ரூ.230.53 கோடி, மதுபானம் ரூ.20.72 கோடி, போதைப் பொருட்கள் ரூ.26.47 கோடி, விலைமதிப்பற்ற உலோகங்கள் (தங்கம்/வெள்ளி) ரூ.292.02 கோடி, இதர பொருட்கள்/இலவசங்கள் ரூ.22.19. மொத்தம் ரூ.151.93 கோடிபறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் 2026 :

# தலைமைக் கழகத்தால் தேர்வு செய்யப்பட்டு மனு தாக்கல் செய்த 13 கழக வேட்பாளர்கள் விவரம்!

| | |
|---|---|
| 1. வில்லியனூர் | - இரா.சிவா |
| 2. மங்கலம் | - எஸ்.எஸ்.ரங்கன் |
| 3. திருபுவனை | - பி.அங்காளன் |
| 4. பாகூர் | - ஆர்.ஆர். செந்தில்குமார் |
| 5. முதலியார்பேட்டை | லீ. சம்பத் |
| 6. உப்பளம் | - வி.அனிபால்கென்னடி |
| 7. உருளையன்பேட்டை | - எஸ்.கோபால் |
| 8. நெல்லித்தோப்பு | - வே.கார்த்திகேயன் |
| 9. ராஜ்பவன் | - விக்னேஷ் கண்ணன் |
| 10. காலாப்பட்டு | ஏ. செந்தில் (எ) ரமேஷ் |
| 11. கதிர்காமம் | - ப.வடிவேலு |
| 12. காரைக்கால் தெற்கு | - ஏ.எம்.எச்.நாஜிம் |
| 13. நிரவி டி.ஆர். பட்டினம் | - எம். நாகதியாகராஜன் |

## தன்னை ஏளனமாக விமர்சித்தவர்களுடன் கைகோர்த்த கண்கொள்ளாக் காட்சி!


# 'டம்மி' சாமிதான் என்பதை மீண்டும் உணர்த்திய அடிமை பழனிசாமி!

## கழக துணைப் பொதுச்செயலாளர் – அமைச்சர் ஐ.பெரியசாமி கடும் விமர்சனம்!

சென்னை, மார்ச் 25-

**டெல்லியில் முடிவு செய்யப்பட்ட ஒப்பந்த அறிவிப்பைச் சொல்லும் வெறும் 'அறிவிப்பாளர்' பதவியை மட்டும் பெற்றதில் பழனிசாமிக்கு என்ன பெருமை வேண்டியிருக்கிறது?**

**"அ.தி.மு.க.வுக்குத் தலைமை தாங்கியவர்கள் இரட்டை விரலைக் காட்டி நின்ற இடத்தில் பா.ஜ.க.வைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் பழனிசாமி என்றும் 'டம்மி' சாமிதான் என்பதை மீண்டும் உணர்த்தியிருக்கிறார் அடிமை பழனிசாமி" என்றும் கழக துணைப் பொதுச்செயலாளர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் இ.பெரியசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டு இடங்களை அ.தி.மு.க. அலுவலகத்தில் அறிவித்ததற்காக எதையோ சாதித்து விட்டது போலப் பெருமைப்பட்டுக் கொள்கிறார் எடப்பாடி பழனிசாமி. கடந்த ஆண்டு ஸ்டார் ஹோட்டலில்தான் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா முன்னிலையில் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி உருவானது. அப்போது நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அமித்ஷாவிற்கு கட்டுப்பட்டு, பேசக் கூடத் திராணி இல்லாமல் அமர்ந்திருந்தார் பழனிசாமி. கூட்டணி முடிவான பிறகு தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்வதற்காக அமித்ஷாவை சந்திக்க டெல்லிக்கு 4 முறை சென்றார் எடப்பாடி. அனைத்தையும் பேசி முடித்தது அமித்ஷா. தொகுதிப் பங்கீட்டு எண்ணிக்கையை மட்டும் சொல்லும் வெறும் 'அறிவிப்பாளர்' பதவியை மட்டும் பெற்றதில் பழனிசாமிக்கு என்ன பெருமை வேண்டியிருக்கிறது?

### அமித்ஷா எழுதிக் கொடுத்த கணக்கு!

"மாப்ள அவர்தான். ஆனா அவர் போட்டிருக்கிற சட்டை என்னுடையது" என்ற காமெடியை போல அமித்ஷா எழுதிக் கொடுத்த கணக்கை அ.தி.மு.க. அலுவலகத்தில் வாசித்திருக்கிறார் பாஜக அடிமை பழனிசாமி. இதில், "கூட்டணியை உறுதி செய்து விட்டோம்" என்ற வெற்று பெருமை வேறு. ஏதோ பெரிதாக சாதித்ததைப் போலச் சிரிப்புக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

டெல்லியின் கண்ணசைவுக்கேற்ப ஆடுபவர் பழனிசாமி என்பது ஊரறிந்தது. பாஜகவினரை அ.தி.மு.க. அலுவலகம் வரவைக்க பழனிசாமிக்கு மு.க.ஸ்டாலினே தேவைப்படுகிறார். "கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சியின் அலுவலகத்தில் ஒருமுறை கூட தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தை நடக்கவில்லை. அலுவலகத்தைப் பூட்டி வைத்துவிடுங்கள்" என தி.மு.க. அறிக்கை விட்ட பிறகுதானே பழனிசாமிக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்திருக்கிறது.

### கூட்டணிக்கு ஆள் தேடிய பழனிசாமி!

"தொகுதிப் பங்கீட்டு ஒப்பந்த நிகழ்வை யாவது அ.தி.மு.க. அலுவலகத்தில் வைத்துக் கொள்ள அனுமதியுங்கள் ஆலம்பனா" என மண்டியிட்டு அனுமதி வாங்கி அறிவித்திருக்கிறார் பழனிசாமி. கடுமையான விமர்சனத்திற்கு பிறகே அ.தி.மு.க. அலுவலகத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது வெறும் கண்துடைப்புதான். முழுசா நனைந்த பிறகு முக்காடு எதற்கு? என்பது போல, டெல்லியில் அமித்ஷாவிடம் உத்தரவு வாங்கி விட்டு, இரண்டு நாள் கழித்து சென்னையில் ஒப்பந்தம் கையெழுத்திடுவது எதற்காக?

"தொண்டர்கள் எதிர்பார்க்கும் கூட்டணி அமையும்; மேலும் சில கட்சிகள் கூட்டணிக்கு வரும்; விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் சேர்ந்தால் ரத்தினம் கம்பளம் விரித்து வரவேற்போம்; பிரமாதமான கட்சி எங்கள் கூட்டணிக்கு வரப் போகிறது; அ.தி.மு.க. கூட்டணி பிரமாண்டமாகும்" என்றெல்லாம் கடந்த ஓராண்டுக் காலமாகக் கூட்டணிக்கு ஆள் தேடிய பழனிசாமியால், ஒருவரைக் கூட அழைத்து வர முடியவில்லை. அந்த பழனிசாமிதான் தொகுதிப் பங்கீட்டைச் சிறப்பாக முடித்த ஆளுமையா? ஏற்கெனவே அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த எஸ்.டிபி.ஐ, தே.மு.தி.க. கட்சிகளைகூட தக்க வைக்க தெரியாதவர்தான் பழனிசாமி!

உண்மையில் அ.தி.மு.க. கூட்டணியில் அதிமுகவைத் தவிர வேறு கட்சிகள் இல்லை. மற்ற கட்சிகள் எல்லாம் பாஜக மிரட்டி அழைத்து வந்தவை. "எங்கள் கூட்டணியில் பாஜக உள்ளது. பா.ஜ.க. கூட்டணியில் பல கட்சிகள் உள்ளன" என்று 2025 ஜூலை 29ஆம் தேதி சொன்னவர் பழனிசாமி. அந்த பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் கட்சிகளைத்தான் பியூஸ் கோயல் அ.தி.மு.க. அலுவலகத்திற்கு அழைத்து வந்தார்.

### பழனிசாமி 'டம்மி' சாமிதான்!

உட்கட்சி விவகாரத்தில் தலையிடுவது, அ.தி.மு.க.விற்கு யார் தலைமை ஏற்க வேண்டும்? போன்ற பல முடிவுகளில் பாஜகவின் கை ஓங்கியிருந்தது. தொகுதிப் பங்கீட்டு எண்ணிக்கையை மட்டும் அறிவிப்பதில் மட்டும் என்ன சாதனை வேண்டியிருக்கிறது? அமித்ஷா எழுதிக் கொடுத்த கணக்கை அ.தி.மு.க. அலுவலகத்தில் அமர்ந்து வெளியிட்டதற்கு வெட்டி வீராப்பு. தொகுதிப் பங்கீட்டை டெல்லியில் முடிவு செய்து பழனிசாமி டம்மி சாமிதான் எனத் தமிழ்நாட்டு மக்களுக்கு மீண்டும் உணர்த்தியிருக்கிறது பா.ஜ.க.!

'இங்கு நல்ல மீன்கள் விற்கப்படும்' என்ற நகைச்சுவையைப் போல 'இங்குப் பிரமாண்டக் கூட்டணி அமைக்கப்படும்' என்ற போர்டை எம்.ஜி.ஆர் மாளிகையின் வாசலில் ஓராண்டுக்கும் மேலாக மாட்டி வைத்துவிட்டு, கடைசியில் யாரும் வராமல், இருப்பவர்களை வைத்து தொகுதிப் பங்கீட்டை நடத்தியிருக்கிறார்கள்.

வீடியோவில் கூட ஜெயலலிதாவுக்காக கையை கக்கத்தில் கட்டிக் கொண்டு நின்ற விஜய்யோடு கூட்டணி சேர "கொடி பறக்குது. பிள்ளையார் சுழி போட்டாச்சு" என்று கெஞ்சிவிட்டு இன்றைக்கு பழனிசாமியின் பேச்சைப் பாருங்கள்!

### கைகோர்த்த காட்சி கண்கொள்ளாக் காட்சிதான்!

"தவெக கொடிகளை அ.தி.மு.க. கூட்டங்களில் பிடிக்கிறார்கள்; தரம் தாழ்ந்து செயல்படுகிறது பழனிசாமி கம்பெனி" எனச் சொன்ன டிடிவி தினகரனின் அமமுக கம்பெனியை பாஜக கபளீகரம் செய்துவிட்டது. "நோட்டாவோடு போட்டி போடும் கட்சி பாஜக. அவர்களோடு கூட்டணி சேர்ந்து சூசைட் பண்ணனுமா?" எனக் கேட்ட தினகரன், அமமுகவைத் தூக்கு மேடையில் ஏற்றியிருக்கிறார்! "எடப்பாடி ஒரு தற்குறி. மூன்றாவது இடம் கூட கிடைக்காது" எனக் கர்ஜித்த அண்ணாமலையும் "எடப்பாடிக்கு நிர்வாகமே தெரியாது" எனச் சொன்ன அன்புமணியும் "பழனிசாமி துரோகி" எனச் சொன்ன தினகரனும் கைகோர்த்த காட்சி கண்கொள்ளாக் காட்சிதான்!

### முடிவெடுக்கும் இடத்தில் அ.தி.மு.க. இல்லை!

கூட்டணிக்குப் பெயர் என்.டி.ஏ. கூட்டணிக்குத் தலைமை அ.தி.மு.க. ஆனால், அந்த அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் தொகுதிப் பங்கீட்டுக்காக 4 முறை டெல்லிக்கு அழைக்கப்பட்டார். சுயமரியாதையுள்ள ரத்தத்தின் ரத்தங்கள் கொதித்தன. பழனிச்சாமி, தினகரன், அன்புமணி எனத் தொடர்ச்சியாக முறை போட்டு அமித்ஷாவை சந்தித்தார்கள். பழனிசாமியின் செயலை முதலமைச்சர் தொடங்கி சாமானிய மனிதர் வரை விமர்சித்தார்கள். இத்தனைக்கும் பிறகுதான் ஒப்பந்தம் செய்யும் இடம் அ.தி.மு.க. தலைமை அலுவலகமாக மாறியது. இப்போதும் கூட அ.தி.மு.க. முடிவெடுக்கும் இடத்தில் இல்லை. டெல்லியில் அமித்ஷாவை சந்தித்து, ஒப்புதல் பெற்ற பிறகே ஒப்பந்தம் கையெழுத்தாவதற்காக கட்சி அலுவலகத்தில் ஒன்று கூடியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அ.தி.மு.க.தான் தலைமை தாங்குகிறது என்பதை வெளிக்காட்டவே ஒப்பந்தம் கையெழுத்து நாடகம் நடந்திருக்கிறது.

### பழனிசாமிக்கு ஏற்பட்ட அவமானங்கள்!

டெல்லியில் புதிதாகக் கட்டப்பட்ட அ.தி.மு.க.அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் எனச் சொல்லிவிட்டு இரவில் பல கார்கள் மாறிச்சென்று அமித்ஷாவை சந்தித்துக் கூட்டணி வைத்த வீராதி வீரர் அல்லவா இந்த பழனிசாமி? முகமூடி அணிந்து, பதுங்கிப் போய் பார்த்த பயந்தான்கொள்ளி, இன்று எம்.ஜி.ஆர் மாளிகையில் நாடோடி மன்னன் படம் காட்டுகிறார்.

மதுராந்தகம், மதுரை மற்றும் திருச்சி கூட்டங்களில் பிரதமர் மோடி, பழனிசாமியின் பெயரை ஒருமுறை கூட உச்சரிக்கவில்லை. பிரதான முகப்பில் எடப்பாடியின் படம் புறக்கணிக்கப்பட்டது. தந்தை பெரியாரின் படத்தை நீக்கினார்கள். கூட்டணி என்ற பெயரில் எடப்பாடி வலுக்கட்டாயமாக வரவைக்கப்பட்டுப் பணிய வைக்கப்பட்டார். இந்த அவமானம் எல்லாம் ஏற்பட்ட பிறகு, "தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் மட்டுமாவது நான் செய்கிறேன்" என பழனிசாமி காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டு வாங்கியிருப்பார் என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்